IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No 165/2016

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.30 PM.

பி.வா.சா. 1 சாட்சி பாப்பம்மாள் த.பெ.ஜெயராமன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 18.08.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தது யார் என்றால் என் மகன் செந்தில் ஆகும். துணையில்லாமல் நான் எங்கும் வெளியே செல்ல முடியாது என்றால் சரிதான். எனக்கு கண் சரியாக தெரியவில்லை என்றால் சரிதான். எனக்கு கண் தெரியாததால்தான் என் மகன் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு எத்தனை வருடங்களாக கண் தெரியவில்லை என்றால் 2 வருடங்களாக கண் தெரியவில்லை.

2. எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். கையெழுத்து போட தெரியுமா என்றால் தெரியாது, கைரேகைதான் வைப்பேன். நான் எங்கு வந்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. அழைத்து வந்துள்ளார்கள். எங்கு வந்திருக்கிறேன் என்று தெரியவில்லை.

நீதிமன்ற கேள்வி: எங்கு வந்துள்ளீர்கள் ?

பதில்: எனக்கு தெரியாது.

நீதிமன்ற கேள்வி: வழக்கு விபரம் தெரியுமா ?

பதில் : தெரியாது.

நீதிமன்ற கேள்வி : நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா?

பதில்: தெரியாது.

நீதிமன்ற கேள்வி : என்னிடம் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து காண்பித்தார்களா ?

பதில்: படித்து காண்பித்தார்கள்.

சாட்சிக்கு கண் பார்வை தெரியாது என்ற நிலையில், சாட்சியின் நிரூபண வாக்குமூலத்தில் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கைரேகை வைத்ததாக வாசகம் எதுவும் காணப்படவில்லை. எனவே, மேற்படி சாட்சியின் பதிலை கவனத்தில் கொண்டும் சாட்சியின் பிரமாண வாக்குமூலமானது சட்டப்படி ஏற்படுத்தப்படவில்லை என்பதை கருத்தில்கொண்டும் சாட்சியின் மேற்படி முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை நீக்கரவு செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:12.45 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.18 10:39:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.